குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.

**STC.No.576/2022**

வழக்கு சாட்சி ம.சா.1

2026ம் மே மாதம் 18 –ம் நாள் மனுதாரர்தரப்பு சாட்சியாகிய 1வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ராஜேந்திரன், உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அன்பழகன் | தொழில் | |
| த/பெ(அ) க/பெ. | | வயது | |
| கிராமம் | | | |
| தாலூக்கா | | | |

**(Accused absent. Filed petition and allowed).**

நாள்: 18.05.2026

**குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் BSC படித்துள்ளேன். என்ன தொழில் செய்கிறேன் என்றால் ரியல் எஸ்டேட் செய்து வருகிறேன், பள்ளி கூடம் வைத்து நடத்தி வருகிறேன்,பைனான்ஸ் செய்து வருகிறேன். தற்போது நான் சொல்லியுள்ளதை தான் என்னுடைய பிரமாணபத்திரிக்கையிலும், புகாரிலும் எனது மனுவிலும் சொல்லியுள்ளளேனா என்றால் ஒன்று இரண்டு தொழில்களை குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் மற்றதை சொல்லாமல் இருந்திருக்கிலாம். நான் சொல்லியுள்ள தொழிலை நிரூபிக்க ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்ன பெயரில் நிதி நிறுவனம் நடத்தி வருகிறேன் என்றால் ஜெயலட்சுமி குரூப்ஸ், ராயல் யூனிவர்சல் பைனான்ஸ், ராயல் சேப் பைனான்ஸ் என்ற பெயரில் நடத்தி வருகிறேன். இந்த 3 நிறுவனங்களில் என்னை தவிர யார் யார் பங்கு தாரர்கள் என்றால் சீனிவாசன், சத்யபிரியா, அர்ச்சனாதேவி, முருகேசன், கீதா, கவிதா, செல்வராஜ், கமலம், குப்புராஜ், வேலுமணி, கவிதாவேலுமணி, மற்ற நபர்களை ஞாபகம் இல்லை. இதில் சத்தியபிரியா என்பவர் எனது மனைவி என்றால் சரிதான். என் மனைவியும் தனிப்பட்ட முறையில் கடன் கொடுத்து வரவு செலவு செய்து வருகிறார் என்றால் சரிதான். இந்த நிதி நிறுவனங்களின் பதிவு சான்றிதழை நீதிமன்றம் கேட்கும் பட்சத்தில் நான் தாக்கல் செய்ய தயரா என்றால் தயார் தான். நான் வருமானவரி செலுத்திவருகிறேனா என்றால் செலுத்திவருகிறேன். எதிரிக்கு கொடுத்த கடனை நான் வருமான வரி கணக்கில் காட்டவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் எனக்கும் நடந்த வரவு செலவுக்கு எந்த ஒரு கணக்கு பதிவும் இல்லை என்றால் சரிதான். வழக்கு காசோலையை எதிரி என்னிடம் நேரடியாக கொடுக்கவில்லை என்றால் சரியல்ல என்னிடம் தான் கொடுத்தார். வழக்கறிஞர் அறிவிப்பு, பிரமாணபத்திரிக்கை மற்றும் புகார்மனுவில் எதிரி காசோலையை எனது நிறுவனத்தில் பணிபுரிந்த நபரிடம் கொடுத்து சென்றார் என்று குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு காசோலையை யார் நிரப்பினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல எனது வீட்டில் வைத்து தான்

காசோலையை எதிரி நிரப்பினார். என்ன காரணத்திற்காக வங்கி காசோலை திருப்பப்பட்டது என்றால் எதிரியின் கையொப்பம் மாறுபாடு உள்ளது என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டது. இது சம்பந்தமாக எதிரியை தொடர்புகொண்டு கேட்டீர்களா என்றால் எதிரியை தொடர்பு கொண்டேன் ஆனால் ஆவரை தொடர்பு கொள்ள முடியவில்லை. நான் எதிரியை தொடர்பு கொண்டது பற்றி வழக்கறிஞர் அறிவிப்பு, பிரமாணபத்திரிக்கை மற்றும் புகார்மனுவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. எனது மனைவியின் வங்கி கணக்கு KVB பவானி கிளையில் உள்ளது என்றால் சரிதான். அதன் கணக்கு எண் 1114135000001716 என்றால் சரிதான். காசோலை சம்பந்தமாக எதிரி எனது வங்கி கணக்கின் மூலமாகவோ, Gpay மூலமாகவோ திருப்புசெலுத்தியுள்ளாரா என்றால் இல்லை. காசோலை சம்பந்தமாக எதிரி எனது மனைவி வங்கி கணக்கிற்கு, Gpay மூலமாகவோ திருப்புசெலுத்தியுள்ளாரா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கு எதிரியிடன் எனக்கு எத்தனை வருடம் வரவு செலவு என்றால் இது தான் முதல் வரவு. பொதுவாக நான் யாருக்காவது கடன் கொடுத்தால் பாதுகாப்பு ஆவணம் வாங்கிக்கொண்டுதான் கடன் கொடுப்பேன் என்றால் சரிதான். நானும், என் மனைவியும் நிதி நிறுவனத்தின் மூலம் கடன் கொடுத்துவிட்டு பணத்தை திருப்பி செலுத்தியவுடன் ஆவணத்தை எதுவும் திருப்பி தராமல் மேற்படி ஆவணத்தை வைத்து தனிப்பட்ட முறையில் பணம் கொடுத்ததாக வழக்கு தாக்கல் செய்வோம் என்றால் சரியல்ல. நான் தனிப்பட்ட வகைகயில் பணம் வரவு செலவு செய்வது என் மனைவிக்கு தெரியாது என்றால் ஒரு சில வரவு செலவு தெரியும். என் மனைவி தனிப்பட்ட வகையில் பணம் வரவு செலவு செய்வது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 2022ம் வருடத்தில் நானும் என் மனைவியும் எதிரிக்கு கடன் கொடுத்துள்ளோம் என்றால் நான் மட்டும் தான் கொடுத்தேன். என் மனைவி எதிரிக்கு எந்த வருடம் கடன் கொடுத்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. வழக்க காசோலையானது எதிரியால் பாதுகாப்புகாக உங்களிடம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கு நான் கொடுத்ததாக சொல்லப்படும் கடன் தொகையை நேரில் பார்த்ததாகவோ, சாட்சியம் இருப்பதாகவோ எனது வழக்கறிஞர் அறிவிப்பு, பிரமாணபத்திரிக்கை மற்றும் புகார்மனுவில் எங்கும் கூறவில்லை என்றால் ஞாபகம் இல்லை. ஆனால் அப்போது என் மனைவி மற்றும் என் அலுவலகத்தில் வேலை செய்யும் நபர் இருந்தார். 2020ம் வருடம் பெறப்பட்ட கடனுக்காக இந்த வழக்கின் காசோலை கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் தான் கடன் வாங்கினார். மேற்படி விபரத்தை நிரூபணம் செய்ய என் மனைவி கணக்கு வைத்திருக்கும் வங்கியின் மேலாளரை அழைத்து விசாரிக்க எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. என் மனைவியை விசாரிக்க எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. காசோலையில் எதிரியின் கையொப்பம் என்ற இடத்தில் இருக்கும் கையொப்பத்திற்கும் காசோலையின் பின்புறம் உள்ள கையொப்பத்திற்கும் மாறு பாடு உள்ளது என்றால் சரியல்ல. இரண்டும் ஒரே மாதிரியாக தான் உள்ளது. அளவில் மாறுபாடு உள்ளது என்றால் சரிதான். கையெழுத்து நிபுணருக்கு அனுப்பு கையெழுத்தை ஆய்வு செய்ய எனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை. இந்த வழக்கை பொறுத்தவரை நான் ஒரு பிணாமி

என்றால் சரியல்ல. மாற்று முறை ஆவணச்சட்டத்தின்படி எதிரியை தொடர்பு கொள்ளமால் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு பொய்வழக்கு என்பதால் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.